பெயார்பஸ்ட் காப்புறுதி லிமிடட்
(நிறுவனம் இலக்கம் : PB5180)
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி),
278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
தொடர்பு இலக்கம் :+94 11 2428428 |
தொலைநகல் :+94 11 2438438
மின்னஞ்சல் : info@fairfirst.lk |
இணையதளம் : www.fairfirst.lk

**காப்புறுதி பத்திர தகவல் ஆவணம் (IPID)**

**கம்பீரமான வீட்டு தீ காப்புறுதி பத்திரம்**

**1. காப்பீட்டு விடயதானம்**

கம்பீரமாக வீட்டு தீ காப்புறுதி பத்திரமானது, உங்களுடைய வீட்டையும் (கட்டிடத்தை) மற்றும் / அல்லது வீட்டுச் சாமான்களையும், தீ மற்றும் அதனையொத்த ஆபத்துகளிலிருந்தும் அதன் உள்ளடக்கத்திற்கும் பூரண பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்ட பூரணமான திட்டமாகும்.

**2. எதனைக் காப்பீடு செய்கின்றது?**

சூறாவளி, புயல், சண்டமாருதம், (CST) அத்துடன் வீடுடைப்பு மற்றும் மின்சாரம் போன்றன உட்பட தீ மற்றும் அதனையொத்த ஆபத்துகளை சுயமாக காப்பீடு செய்கின்றது. கலவரம், பணிப் பகிஷ்கரிப்பு மற்றும் கலகம் பயங்கரவாதம், வெள்ளம் (SRCC) உட்பட தேர்வுக்குரிய காப்பீடுகளும் கிடைக்கின்றன. உங்களது குறிப்பான காப்பீட்டு விபரங்கள் உங்களது காப்புறுதிப் பத்திர அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**1. காப்பீடு செய்யப்படாதன யாவை? (ஒரே பார்வையில்)**

அட்டவணையில் குறித்துரைக்கப்படா விடின், வெள்ளம், கலகம் அல்லது வன்முறைச் செயல்கள் உட்பட இயற்கை அனர்த்தங்களை இக்காப்புறுதிப் பத்திரம் காப்பீடு செய்வதில்லை.

தீயின் போதும் அல்லது அதன் பின்னரும் ஏற்படும் களவு காப்பீடு செய்யப்பட்டில்லை.

விஸதரிப்பாக குறித்துரைக்கப்படா விடின், காப்புறுதி செய்யப்பட்ட சொத்தினுள் இடம்பெறும் திடீர் தகனம், அத்துடன் போர் மற்றும் பயங்கரவாதம் விலக்கப்பட்டுள்ளன.

பணம், தங்கம், பதிக்கப்படாத மாணிக்க கற்கள் மற்றும் பெரும்பாலான நகைகள் காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டில்லை.

**4. காப்புறுதிக் கட்டணம் செலுத்துகை**

பொதுவாக ஒரு வருட காலமாகிய காப்புறுதிக் காலத்துக்கு ஒரே செலுத்துகையில் செலுத்தப்பட வேண்டும்.

## 5. காப்புறுதி பெறுனரின் கடப்பாடுகள்

அதன் நிர்மானம், அமைவிடம் மற்றும் உத்தேச உபயோகம் ஆகிய விபரங்கள் உட்பட சொத்தைப் பற்றிய உண்மையானதும், சரியானதுமான தசவல்கள் வழங்கப்பட வேண்டும்.

கோரத்தக்க சம்பவமொன்றின் போது, காப்புறுதி செய்யப்பட்ட சொத்துக்கு மேலும் இழப்பு அல்லது சேதம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான நியாயாமான சகல முன்னெச்சரிக்க நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும், கோரிக்கையை மதிப்பீடு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள யாரும் மதிப்பீட்டாளர்கள், இழப்பு இயைபாக்குனர்கள் அல்லது விசாரணையாளர்களுடன் முழுமையான ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஏதும் சேதம் அல்லது சிதைவு பற்றி உடனடிகாய பயார்பஸ்ட்டுக்கு அறிவிக்கப்பட வேண்டியதுடன், சேதத்தின் புகைப்படங்கள் உட்பட சம்பந்தப்பட்ட சகல ஆதார ஆவணங்களும், திருத்த வேலை மதிப்பீடுகளும் மற்றும் பாதிப்புக்குள்ளான அம்சங்களின் உரித்துரிமை சான்றுகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## 6. முறைப்பாடுகளையும் இன்னல்களையும் கையாள்தல்

**படிமுறை 1 – பெயார்பஸ்ட் இன்சூரன்ஸோடு தொடர்பு கொள்ளவும் –**

☎+94 11 2428282 (மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 5.00 வரை) | ✉ – info@fairfirst.lk

உங்கள் விடயங்களை பெயாபஸ்ட்டின் பொறுப்பு & இணக்க குழுவுக்கு கொண்டு செல்லலாம்.

**படிமுறை 2 – (தீர்க்கப்படா விடின்) புறக் கொண்டு செல்லல் –**

- இலங்கை காப்புறுதி சீர்படுத்தல் ஆணையம் (IRCSL)

☎ +94 11 2335167 | ✉ info@ircsl.gov.lk | 🌐 www.ircsl.gov.lk

- காப்புறுதி குறைகேள் அதிகாரி

☎ +94 11 2505542 / +94 11 2505041 | ✉ info@insuranceombudsman.lk |

🌐 www.insuranceombudsman.lk

## 7. மேலும் தகவலுக்கு எம்மை தொடர்பு கொள்ளவும் –

**பெயார்பஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடட்**
எக்சஸ் டவர் II (14 ஆம் மாடி), இல.278/4, யூனியன் இடம், கொழும்பு 02, இலங்கை
☎+94 11 2428428 | ✉ info@fairfirst.lk | 🌐 www.fairfirst.lk

## 8. வேறேதும் தகவல்கள்

கோரிக்கை செலுத்துகையில் குறைவை தவிர்த்துக் கொள்வதற்காக, சொத்தின் முழுப் பெறுமதியில் 75% வீதமாவது காப்புறுதி செய்யப்பட வேண்டும்.

இழப்பொன்றின் போது காப்புறுதி தொகையானது சொத்தின் 75% க்கும் குறைவாயின், காப்புறுதி செய்யப்படாத பகுதிக்கு நீங்களே உங்களுடைய காப்புறுதி வழங்குனராக கருதப்படுவதோடு, கோரிக்கை செலுத்துகையானது விகிதாசாரமாக குறைக்கப்படும்.

உங்களுடைய வீடு தொடர்ச்சியாக 30 நாட்களுக்கு மேல் காலியாக இருந்தால், காப்பீடு முடிவுறும். இவ்வாறு நடைபெறின், காப்பீட்டைத் தொடர முடியுமாவென தீர்மானிப்பதற்கு தயவு செய்து எமக்கு அறிவிக்கவும்.

இதுவொரு அடிப்படையான தீ மற்றும் மின்னல் காப்புறுதிப் பத்திரமாகும். விரிவான பாதுகாப்புக்காக, கிடைக்கப் பெறும் தேர்வுக்குரிய வியாபகங்கள் பற்றி கலந்தாலோசிக்குமாறு நாம் பரிந்துரைக்கின்றோம்.

**குறிப்பு –** பிரதான காப்பீடு மற்றும் அவசியமாயின், மேலதிக காப்பீடுகளினதும் சாராம்சம் ஒன்றை வழங்குவதே இந்த **IPID** இன் குறிக்கோளாகும். இது உங்களது குறிப்பான தனிநபர் பிரத்தியேக தேவைகளுக்கானதல்ல. முழுமையானதும் பிரத்தியேகமானதுமான தகவல்களை, ஒப்பந்தத்துக்கு முந்திய மற்றும் ஒப்பந்த நியதிகளில் பூரணப்படுத்தவும். உற்பத்தியின் விடுகைகள், உங்களது காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. **IPID** யானது, காப்புறுதியின் / ஒப்பந்தத்தின் அங்கமாகாது. எனவே, ஏதும் சச்சரவின் போது, காப்புறுதி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளும் நிபந்தனைகளுமே மேலோங்கியிருக்கும்.